Registered as a Newspaper    பக்கங்கள் 04    விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

நாதம் 04    திருவள்ளுவர் ஆண்டு 2024    ஆவணி 02    [18-08-1993]    புதன்கிழமை    ஓசை 181

## மைசூர்பருப்புக்கு பதில் கழிவுப்பொருள்
## ப. நோ. கூ. சங்கம் முறையீடு

யாழ் செயலகத்தினால் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட பருப்பு மூடைகள் சிலவற்றில் கழிவுப்பொருள்கள் நிரப்பப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கொழும்பிலிருந்து கப்பலில் அனுப்பிவைக்கப்பட்ட மைசூர் பருப்பு மூடைகளிலேயே இக் கழிவுப்பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டு யாழ். செயலக அதிகாரிகளிடம் புகார்செய்யப்பட்டுள்ளது. சமீபத்தில், கப்பலில் ஏற்றிவரப்பட்ட இந்த மூடைகள் யாழ். கூட்டுறவுச் சங்கங்களுக்கு, மட்டுப்படுத்தப்பட்ட விலையில் விற்பனை செய்யும்படிகோரி யாழ். செயலகத்தினால் விநியோகம்செய்யப்பட்டது. இந்தக் கழிவுப் பொருள்கள் நிரம்பிய பருப்பு மூடைகள் தெல்லிப்பழை கூட்டுறவுச் சங்கத்தில் ஆறு மூடைகளும், ஊர்காவற்றுறை கூட்டுறவுச் சங்கத்தில் மூன்று மூடைகளும் இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. வேறு பல கூட்டுறவுச் சங்கங் (4 ஆம் பக்கம் பார்க்க)

# ராணுவ அதிரடிப் பிரிவை விரிவாக்கத் திட்டம்;
# மேலும் 10 பிரிவுகள் சேர்த்துக் கொள்ள முடிவு

## மாதகல் ராணுவ விருதி மீது புலிகள் ஷெல் தாக்குதல்

மாதகல் பகுதியில் நிலை கொண்டுள்ள சிறிலங்கா இரா ணுவ காவலரண்களின் பின் னுள்ள இராணுவ விடுதிகள் மீது விடுதலைப் புலிகள் எறி கணை தாக்குதல்களை மேற் கொண்டனர்.

நேற்றுக் காலை 7. 20 மணி யளவில் விடுதலைப் புலிகள் நடாத்திய இவ் எறிகணைத் தாக்குதலினால் இராணுவ தரப்பினருக்கு ஏற்பட்ட சேத விபரங்கள் தெரியவில்லை. இதேவேளை புலிகளின் தாக் குதலையடுத்து இராணுவத் தினர் தமது நிலைகளிலிருந்த வாறே பீரங்கித் தாக்குதலை யும் மோட்டார் எறிகணை மற்றும் துப்பாக்கிப் பிரயோக மும் மேற்கொண்டனர்.

## பாதுகாப்பு வலயத்துள் வீழ்ந்த எறிகணைகள்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவுப் பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் நேற்றுமுன் தினம் மாலை 6 மணியளவில் ஏவிய எறிகணைகளில் சில யாழ். போதனா வைத்திய சாலை பாதுகாப்பு வலயத் தில் வீழ்ந்து வெடித்துள்ளன.

இதுகுறித்து சம்பந்தப்பட்ட வர்களுக்கு அறிவிக்கப்பட்டுள் ளதாக சர்வதேச செஞ்சிலு வைச் சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (பா)

## கடற்படை தாக்குதலில் பொதுமகன் காயம்

சிறிலங்கா கடற்படைப் படகு ஒன்று அலம்பில் கரை யோரப் பகுதியை நோக்கி நடாத்திய பீரங்கி மற்றும் கலி பர் தாக்குதல்களால் பொது மகன் ஒருவர் காயமடைந் தார்.

நேற்றுமுன் தினம் காலை 9.00 மணியளவில் முல்லைத் தீவு கடற்பாப்பிலிருந்து அலம் பில் பகுதி நோக்கி வந்த கடற் படை பீரங்கிப் படகே மேற் படி தாக்குதல்களை மேற் கொண்டது.

## மட்டக்களப்பு மோதலில் இரு புலிகள் வீரச்சாவு

## கிழக்கை கட்டுப்படுத்த அவசியமாம்

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தை கட்டுப்பாட்டிற்குள் வைத்துக் கொள்வதற்கென மேலும், பத்து இராணுவ அதிரடிப்படை அணிகளை உருவாக்க சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சுத் தீர் மானித்துள்ளது. இதன் பிரகாரம் தற்பொழுது 24 ஆகவுள்ள இராணுவ அதிரடிப்படைப் பிரிவுகள் 34 ஆக அதிகரிக்கப்படும் எனவும் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது.

கிழக்கு மாகாணத்தில் இரா ணுவ நடவடிக்கைகளை அதிக ரிக்கவும், கைப்பற்றிட பகுதி களை நிர்வகிக்கவுமே புதிய அதிரடிப்படை அணிகள் தேவையாகவுள்ளதாகப் பாது காப்பு வட்டாரங்கள் தெரிவிக் கின்றன.

இதற்கென பிரிகேடியர் ஜயந்தபெரேரா என்னும் அதி காரியையும்சிறிலங்காஅரசாங் கம் நியமித்துள்ளது.

இப்புதிய படையணிக்குத் தற்பொழுது சேவையிலுள்ள இராணுவத்தில் இருந்தே ஆட் கள் சேர்க்கப்படுவார்கள் என் றும், அவ்வாறு சேர்க்கப்படும் போது இராணுவத்தில் ஏற்ப டும் வெற்றிடத்தை நிரப்ப இராணுவத்திற்கு ஆட்கள் வெளியில் இருந்து சேர்க்கப் படுவர் எனவும் தெரிவிக்கப் படுகின்றது.

மேலும், இராணுவ அதிர டிப்படைக்குச் சேர்க்கப்படும் துருப்புகளுக்கு பலஇடங்களில் பயிற்சிகள் நடைபெறவும் ஏற் பாடாகியுள்ளது. இவர்களுக்கு இப் பயிற்சியைமுடிக்க குறைந் தது எட்டுமாதகாலம்தேவைப் படுவதாகவும் தெரிவிக்கப்படு கின்றது.

## கிழக்கை கட்டுபடுத்தும் வரை புலிகளுடன் பேச்சு இல்லை

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் புலி களைத் தோற்கடிக்கும் வரை புலிகளுடன் எதுவித பேச்சுக்க ளும் இல்லை என அரசாங்கம் முடிவெடுத்துள்ளதாக ஏஜென்சி செய்திகள் தெரிவித் தன.

இதற்கென துரித நடவடிக் கைகளை மேற்கொள்வதென வும் அரசாங்கம் முடிவெடுத் துள்ளதாக தெரிவிக்கப்படு கிறது. குறிப்பாக இராணுவ கட்டுப்பாட்டு பிரதேசங்களில் புலிகள் நடவடிக்கையை முற் றாக தடுக்க முயற்சிகள் மேற் கொள்ளப்படும் எனவும் தெரி விக்கப்பட்டது.

இதேவேளை மன்னார்,வவு னியா பகுதியில் மூன்றுபாரிய இராணுவ முகாம்களை அமை ப்பதற்கும் திட்டமிடப்பட் டுள்ளதாக கூறப்படுகிறது.

# தப்பி ஓடிய படையினரை மீண்டும் சேர அழைப்பு

சிறிலங்கா இராணுவத்தை விட்டு தப்பியோடியவர்களை உடனடியாகக் கடமைக்குத் திரும்புமாறு தளபதி லெப்டி

இராணுவத்தினர் தப்பியோடி தலைமறைவாகியிருப்பதை இராணுவ வட்டாரங்கள் ஒப் புக் கொண்டுள்ளமை குறிப்

கோள் விடுத்துள்ளார்.

தப்பியோடிய இந்த இரா ணுவத்தினரில் சிலர் வெளி நாடுகளுக்குச் சென்றிருப்ப

## கடற்படை தாக்குதல்

(வடமராட்சி)

முனைக் கடற்பரப்பில் தொழிலில் ஈடுபட்டிருந்தமீன வர் ஒருவர் நேற்று முன் தினம் காலை 6.30 மணியள வில் சிறிலங்கா கடற்படையின ரால் தாக்கப்பட்டார்.

முனையைச் சேர்ந்த துரை-கமல்ராஜ் என்பவரே கடற் படையினரின் தாக்குதலுக்கு இலக்கானார். (யோ)

## விமானம் நோட்டம்

(வடமராட்சி)

வடமராட்சிப் பகுதிகளில் நேற்று முன்தினம் இரவு9 30 மணியளவில் குண்டுவீச்சு விமா னம் ஒன்று நோட்டமிட்டது. ஆனையிறவு பக்கமாக வந்த இவ் விமானம் தாழப்பறந்து பேரிரைச்சலுடன் தொண்டம னாறு, வல்வைப் பகுதிகளை மையமாகவைத்து நோட்டமிட் டது. (யோ)

## எறிகணை வீச்சு

(யாழ்ப்பாணம்)

வசாவிளான் பகுதியில் நிலை கொண்டுள்ள சிறிலங்கா இரா (4ஆம் பக்கம் பார்க்க)

## கற்பூரம் எடுத்துவந்தவர்

## பாதுகாப்பு வலயத்துள் வீழ்ந்த எறிகணைகள்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவுப் பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் நேற்றுமுன்தினம் மாலை 6 மணியளவில் ஏவிய எறிகணைகளில் சில யாழ். போதனா வைத்திய சாலை பாதுகாப்பு வலயத்தில் வீழ்ந்து வெடித்துள்ளன.

இதுகுறித்து சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (பா)

## கடற்படை தாக்குதலில் பொதுமகன் காயம்

சிறிலங்கா கடற்படைப் படகு ஒன்று அலம்பில் கரையோரப் பகுதியை நோக்கி நடாத்திய பீரங்கி மற்றும் கலிபர் தாக்குதல்களால் பொதுமகன் ஒருவர் காயமடைந்தார்.

நேற்றுமுன் தினம் காலை 9.00 மணியளவில் முல்லைத்தீவு கடற்பாப்பிலிருந்து அலம்பில் பகுதி நோக்கி வந்த கடற்படை பீரங்கிப் படகே மேற்படி தாக்குதல்களை மேற்கொண்டது.

## மட்டக்களப்பு மோதலில் இரு புலிகள் வீரச்சாவு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பின் காட்டுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் எதிர்பாராத விதமாக இடம்பெற்ற மோதலின்போது இரு புலிகள் வீரச்சாவடைந்தனர்.

கடந்த 14-ம் திகதி மாலை 5.45 மணியளவில் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள உன்னிச்சை குதம்பா காட்டுப் பகுதியில் நடைபெற்ற எதிர்பாராத மோதலின்போது வீரவேங்கை கமல்ராஜ் / கமல் [ஆனந்தன் சிவகுமார், ஆஸ்பத்திரி வீதி, மன்னம்பிட்டி, மட்டக்களப்பு] மற்றும் வீரவேங்கை தேவநீதன் (அருளம்பலம் சுதர்சன், வன்னியனார் வீதி, களுதாவளை, களுவாஞ்சிக்குடி) ஆகிய இரு போராளிகளே வீரச்சாவடைந்தவர்களாவர்.

வீரச்சாவடைந்த இவ்விரு போராளிகளுக்கும் விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

## வடபகுதி வாலிபர் இருவர் கொழும்பில் கைது

(கொழும்பு)

கொழும்பில் முகத்துவாரம் பகுதி பொலிசாரால் வடபகுதியைச் நேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முகத்துவாரம் பகுதியிலுள்ள வீடொன்றில் நான்கு மாதங்களுக்கும் மேலாக தங்கியிருந்த இவர்கள் வெளிநாடு செல்வதற்காக காத்திருந்தபோது கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

வடபகுதியிலுள்ள இராணுவ முகாம்கள் பலவற்றின் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களில் இவர்கள் பங்கேற்றுள்ளார்கள் எனவும், வெளிநாடு செல்வதற்காக காத்திருப்பதாக இவர்கள் கூறியிருப்பதை ஏற்க முடியாது இருப்பதாகவும் பொலிசார் மேலும் கூறியுள்ளனர்.

மேலும் கடந்த 8ஆம் 9ஆம் திகதிகளில் மட்டும் கொழும்பு நகரில் நானூறுக்கும் அதிகமான தமிழ இளைஞர்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டு இருக்கின்றனர்'

## நியாயவிரோத கைதுகள் நிறுத்த நீதிமன்றம் உத்தரவு

நியாய விரோதமான முறையில் மக்களைக் கைது செய்வதையும், தடுத்து வைப்பதையும் நிறுத்துமாறு உச்சநீதிமன்றம் எச்சரித்துள்ளது. நீதியற்ற முறையில் கைது செய்து பொலிஸ் நிலையங்களில் தடுத்து வைப்பதை நிறுத்துவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு மூன்று பேரைக் கொண்ட உச்சநீதிமன்று நீதிபதிகள் பொலிஸ் மா அதிபர் ஏணஸ்ட் பெரேராவைப் பணித்துள்ளனர்.

ஆடைத் தொழிற்சாலைப் பெண் ஒருவர் தங்கும் விடுதி ஒன்றில் தங்க நகையைத் திருடினார் என்ற சந்தேகத்தின் பேரில் ஒருவர் நியாய விரோதமான முறையில் சீதுவப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டார். பெண் ஊழியர் தாக்கல் செய்த மனுவை விசாரித்த பிரதம நீதியரசர் ஜி. பி. எஸ். டி சில்வா தலைமையிலான 3 நீதியரசர்களைக் கொண்ட குழு இவ்வாறு தீர்ப்பு வழங்கியது.

பொலிஸ் மா அதிபருக்கு இப்படியான ஒரு எச்சரிக்கை வழங்கப்பட்டது இதுதான் முதற் தடவை என்று கொழும்பு சட்ட வட்டாரங்களில் பேசிக் கொள்ளப்படுகின்றன.

(4ஆம் பக்கம் பார்க்க)

...ரிக்கவும், கைப்பற்றிய பகுதிகளை நிர்வகிக்கவுமே புதிய அதிரடிப்படை அணிகள் தேவையாகவுள்ளதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதற்கென பிரிகேடியர் ஜயந்தபெரேரா என்னும் அதிகாரியையும்சிறிலங்காஅரசாங்கம் நியமித்துள்ளது.

இப்புதிய படையணிக்குத் ... கள் சேர்க்கப்படுவார்கள் என்றும், அவ்வாறு சேர்க்கப்படும்போது இராணுவத்தில் ஏற்படும் வெற்றிடத்தை நிரப்ப இராணுவத்திற்கு ஆட்கள் வெளியில் இருந்து சேர்க்கப்படுவர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், இராணுவ அதிரடிப்படைக்குச் சேர்க்கப்படும் துருப்புகளுக்கு பலஇடங்களில் ...

# தப்பி ஓடிய படையினரை மீண்டும் சேர அழைப்பு

சிறிலங்கா இராணுவத்தை விட்டு தப்பியோடியவர்களை உடனடியாகக் கடமைக்குத் திரும்புமாறு தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சிசில் வைத்தியரட்ண வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கடந்த சில வருடங்களில் சிறிலங்கா இராணுவத்திலிருந்து பல ஆயிரக்கணக்கான இராணுவத்தினர் தப்பியோடி தலைமறைவாகியிருப்பதை இராணுவ வட்டாரங்கள் ஒப்புக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு கடமை நேரங்களில் தலைமறைவான இராணுவத்தினரையே உடனடியாக மீண்டும் கடமைக்குத் திரும்புமாறு அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தப்பியோடிய இந்த இராணுவத்தினரில் சிலர் வெளிநாடுகளுக்குச் சென்றிருப்பதாகவும் மற்றும் சிலர் கொள்ளைக் குழுக்களுடன் இணைந்து கொள்ளைகளில் ஈடுபட்டு பொலிசாரிடம் அகப்பட்டுள்ளதாகவும் திவயின செய்தி வெளியிட்டுள்ளது.

## துண்டுப்பிரசுரம் வீச்சு

[யாழ்ப்பாணம்]

சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான உலங்கு வானூர்தி ஒன்று நேற்று நண்பகல் வேளையில் யாழ். நகர் மற்றும் அதனைஅண்டியபகுதிகளை நோக்கி துண்டுப்பிரசுரங்களை வீசியது.

எனினும் வீசப்பட்ட துண்டுப் பிரசுரங்கள் மேற்படி பகுதிகளில் வீழ்ந்ததாக தகவல் கிடைக்கவில்லை. மேலும் இத்துண்டுப் பிரசுரங்கள் யாழ். நகரின் மேற்குப் புறமாக காற்றோடு காற்றாக அடித்துச் செல்லப்பட்டதாக தெரிய வருகின்றது [பா]

## மணலாறுப் பகுதிக்கு புதிய ராணுவத் தளபதி

(கொழும்பு)

மணலாறுப் பகுதியில் நிலைகொண்டிருக்கும் ஆறாம்பிரிகேட்டின் புதிய தளபதியாக பிரிகேடியர் அசோகா ஜெயவர்தனா நியமிக்கப்பட்டுள்ளார். இப்புதிய நியமனம் இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரட்னவினால் வழங்கப்பட்டுள்ளது.

இப்பகுதிக்கு பொறுப்பாக இதுவரை இருந்து வந்த பிரிகேடியர் பரிலியனகே கிழக்குப் பகுதிக்கு இடமாற்றப்பட்டுள்ளார். மண்கிண்டிமலை இராணுவ முகாம் வீழ்ச்சியடைந்ததையடுத்தே இந்த இராணுவ உயர்மட்ட மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

இதனிடையே மண்கிண்டிமலை இராணுவ முகாம் அழிப்பு குறித்து விசாரணை நடத்திய இராணுவக் குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் ஜெரிசில்வா இவ்வாரம் அறிக்கைக்கு இறுதிவடிவம் கொடுப்பதில் தீவிரமாக ஈடுபட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது. அறிக்கை இராணுவத் தளபதி சிசில் வைத்தியரட்னவிடம் எந்த நேரத்திலும் கையளிக்கப்படலாம்.

# அரசியல் அமைப்பு குறித்து ஆராய குழு நியமனம்

அரசியல் அமைப்பை மாற்றுவது அல்லது திருத்துவது தொடர்பாக ஆராயஇருக்கும் பாராளுமன்ற தெரிவுக் குழுவிற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமை வகிப்பார் என்று சபாநாயகர் எம். எச். முகம்மது பாராளுமன்றத்தில் நேற்று அறிவித்தார்.

பதினெட்டு உறுப்பினர்கள் கொண்ட இத்தெரிவுக்குழுவில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் ஐ. தே. க. பொதுச் செயலாளர் சிறிசேனகுரே, அரசியலமைப்பு விவகார ராஜாங்க அமைச்சர் கே. என். சொக்ஸி, சபை முதல்வர் விஜேபாலமென்டிஸ், கிராமிய கைத்தொழில் துறை அபிவிருத்தி அமைச்சர் எஸ். தொண்டமான், டாக்டர் விமல் விக்கிரமசிங்க, வெளிநாட்டு அமைச்சர் ஏ. ஸி. எஸ் ஹமீத், போல் பெரேரா, சந்திரா ரணதுங்க, ஹரேந்திரநாத் குருவில ஆகியோரும் ஐ. தே. க. சார்பில் நியமனம் பெற்றுள்ளனர். மேலும் பாராளுமன்ற உறுப்பினர்களான எம். எச். எம். அஷ்ரப், தினேஷ் குணவர்த்தனா, டி. எம். ஜயரத்னா, ஸ்டான்லி திலகரத்தினா, கே. பிரேமச்சந்திரன், அத்தாவுட செனவிரத்தினா, பஷீர் சேகுதாவூத், தர்மசிறி சேனநாயக்கா ஆகியோரும் இச்குழுவில் நியமனம் பெற்றுள்ளனர்.

## கிழக்கை கட்டுபடுத்தும் வரை புலிகளுடன் பேச்சு இல்லை

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் புலிகளைத் தோற்கடிக்கும் வரை புலிகளுடன் எதுவித பேச்சுக்களும் இல்லை என அரசாங்கம் முடிவெடுத்துள்ளதாக ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

இதற்கென துரித நடவடிக்கைகளை மேற்கொள்வதெனவும் அரசாங்கம் முடிவெடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. குறிப்பாக இராணுவ கட்டுப்பாட்டு பிரதேசங்களில் புலிகள் நடவடிக்கையை முற்றாக தடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை மன்னார், வவுனியா பகுதியில் மூன்றுபாரிய இராணுவ முகாம்களை அமைப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது

## நோட்டம்

(வடமராட்சி)

வடமராட்சிப் பகுதிகளில் நேற்று முன்தினம் இரவு9 30 மணியளவில் குண்டுவீச்சுவிமானம் ஒன்று நோட்டமிட்டது. ஆனையிறவு பக்கமாக வந்த இவ் விமானம் தாழப்பறந்து பேரிரைச்சலுடன் தொண்டமனாறு, வல்வைப் பகுதிகளை மையமாகவைத்து நோட்டமிட்டது. (யோ)

## எறிகணை வீச்சு

(யாழ்ப்பாணம்)

வசாவிளான் பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இரா

(4ஆம் பக்கம் பார்க்க)

## கற்பூரம் எடுத்துவந்தவர் 2 மாதங்கள் தடுத்துவைப்பு

(வவுனியா)

வவுனியா தாண்டிக்குளம் தடை முகாமினூடாக கற்பூரம் கொண்டுவந்த தமிழ் பொதுமகன் ஒருவர் இரண்டு மாதங்கள் தடுத்து வைக்கப் பட்டபின்னர் நேற்று விடுவிக்கப்பட்டார்.

ஒட்டிசுட்டான் முத்தையன் கட்டைச் சேர்ந்த சூசை தேவநாயகம் என்பவரே விடுவிக்கப்பட்டவராவர். இரு மாதங்களுக்கு முன்பு இவர் பவுடர்ரின்னிற்குள் கற்பூரத்தை எடுத்து வந்த போது தாண்டிக்குள இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டு இருவாரங்கள் ஜோசப் இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். பின்னர் இவர் வவுனியா கண்டிவீதியில்உள்ள இராணுவத்தினரின் புலனாய்வுப் பிரிவு அலுவலகத்திலும் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

## அடுத்தவாரம் 'குமண' திருமலை செல்லும்

தற்சமயம் பருத்தித்துறை துறைமுகத்தில் பொருள்களை இறக்கிக் கொண்டிருக்கும் ''குமண'' கப்பல் எதிர்வரும் 24ஆம் திகதி திருக்கோணமலை நோக்கி புறப்பட்டுச் செல்லவுள்ளது.

இக்கப்பலில் யாழ். போதனாவைத்திய சாலையில் இருந்து சிகிச்சைக்கு கொழும்பு வைத்திய சாலைக்குப் புறப்பட்டுச் செல்லும் ஒருதொகுதி நோயாளர் திருக்கோணமலைக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளனர். [பா]

## கொப்பேகடுவ மரணம் விசாரணைக்குழு அறிக்கை புத்தகமாக வெளிவரும்

லெப்டினன்ட் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ உட்பட 10பேர் கொல்லப்பட்டது தொடர்பாக நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவின் அறிக்கை வெளியிடப்படவுள்ளது. இதுகுறித்து மூவரடங்கியவிசாரணைக் குழுவொன்று சிறிலங்கா ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டது தெரிந்ததே.

## மீனவர் நிவாரணம் 4 மாதங்களாக இல்லை

### யாழ். அரச அதிபரிடம் முறையீடு

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு, கல்முனை, பள்ளிக்குடா பகுதிகளில் கடற்தொழில் செய்துவந்த மீனவர்களுக்கான நிவாரணம் கடந்த நான்கு மாதங்களாக வழங்கப்படவில்லை என யாழ். அரசாங்க அதிபரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

இப்பகுதியில் கடல்வலயச் சட்டம் பிரகடனம் செய்யப்பட்டுள்ளதால் இம் மீனவர்கள் தொழிலின்றி பெரும் துன்பம் அனுபவித்து வருகின்றனர்.

கடல்வலயச் சட்டம் நீக்

(4 ஆம் பக்கம் பார்க்க )

## கொழும்பு அடைந்தார்

[யாழ்ப்பாணம்]

விடுதலைப் புலிகளினால் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்ட யுத்தக்கைதியும் மற்றும் அவரது மனைவி ஆகி

(4ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### ஸ்ரீகாந்த் புத்தகசாலை

இந்திய நாவல்கள், டிக்செனெறிகள், இலங்கை வெளியீடுகள் ஆங்கில தமிழ் சொற்களஞ்சியம், (மற்றாஸ் டிக்செனெறி சீவப இன்டஸ்றீஸ் வெளியீடுகளும் அருள் உரை ஆகியவை நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு ஸ்ரீகாந்தி புத்தகசாலை நல்லூர்
(சி-7134)

### தவறிவிட்டது

29 7 93 இரவு அல்லிப்பளை இறங்கு துறையில் இருந்து பஸ் நிலையத்திற்கு செல்லுகையில் பேர்ஸ் ஒன்றை (சொக்கிலேற் நிற கிட்பாக்) தவறிவிட்டது அதனுள் முக்கிய ஆவணங்கள் உள்ளதால் கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்க்காணும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். க. கிருபாகரன் இல. 42 செட்டித்தெரு நல்லூர், யாழ்ப்பாணம். சன்மானம் வழங்கப்படும். (5675]

### மாடு விற்பனைக்குண்டு

எமது பண்ணையில் உள்ள 8ஆம் இலக்க பசுமாடு கூறுவிலை மூலம் விற்பனை செய்யப்படவுள்ளது. வாங்க விரும்புபவர்கள் 23 08 93க்கு முன்னர் கூறுவிலையை சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். அலுவலக நேரத்தில் மாட்டைப் பார்வையிடலாம் பொது முகாமையாளர், யாழ் மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலி (சி-7211)

### கண்ணொளி

கண்ணொளி துலங்கிட கரிசலாங்கண்ணி (கையாந்தகரை) தினமும் சாப்பிடுவோம். மில்க்வைற் நீலசோப் மேலுறை/ சலவைத்தூள் பக்கற் பத்து(10) சேர்ப்பித்து ஒரு பதிகளை பெறுங்கள். "மில்க்வைற்"
(சி/7197)

### பெற்றுக்கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க்கோவில் பின் வீதியில கண்டெடுக்கப்பட்ட சிவஞானேஸ்வரி அம்மாள் கனகேஸ்வரன்,(315 மகேசன் வீதி நவாலி) என்பவரது அடையாள அட்டை எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் வந்து பெற்றுக்

# இலவச மதிய உணவு திட்டம் புனர்வாழ்வு அமைச்சிடம்

## -உணவிற்குப் பதில் பால்?

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படும் இலவச மதிய உணவுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு புனரமைப்பு புனர்வாழ்வு மற்றும் சமூக நலன் அமைச்சுக்கு மாற்றப்பட்டுள்ளது. செப்ரெம்பர் முதலாம் திகதி இந்தப் பொறுப்பை மேற்படி அமைச்சு பொறுப்பேற்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது. இதுவரை கல்வி அமைச்சு இலவச மதியஉணவுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வந்தது என்பது குறிப்பிடத் தக்கது ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவின் பணிப்புரையின் பேரிலேயே இந்த மாற்றம் செய்யப்படுகிறது.

இலவச மதிய உணவிற்குப் பதிலாக மாணவர்களுக்கு ஒரு கிளாஸ் பால் வழங்குவதுபற்றி அரசு ஆலோசித்து வருவதாகவும் தெரியவருகின்றது. இலவச மதியஉணவுத்திட்டத்தின் கீழ் நாளொன்றுக்குத் தலா 3 ரூபா அரசு வழங்கியும், சத்துணவை மாணவர் மதிய போசனத்துக்கு எடுத்துவரத் தவறுவது காரணமாகவே இந்த மாற்றம் கொண்டுவரப்படுவதாகக் கூறப்படுகிறது.

### மாகாணசேவைக்கு ஒய்வூதியம்

மாகாண அரசாங்க சேவையின் சகல ஊழியர்களுக்கும் ஒய்வூதியம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக தெரியவருகிறது

இந்த ஓய்வூதிய நடைமுறைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாகவும் இத்திட்டம் துரிதமாக அமுல் செய்யப்படவுள்ளதாகவும் அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா தெரிவித்தார்.

### ஆதாரம்காட்டி பெறவும்

யாழ்.செயலக வளவில் சிறுதொகைப்பணம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டி அலுவலக நேரத்தில் செயலக நிர்வாக உத்தியோகத்தரிடம் பெற்றுக் கொள்ளும்படி கேட்கப் பட்டுள்ளது.

### கல்வி நிர்வாக சேவை

## வினைத்திறன் காண்பரீட்சை கொழும்பில் நடைபெறும்

இலங்கை கல்வி நிர்வாக சேவை அலுவல்களுக்கான முதலாவது வினைத்திறன் காண் தடைப் பரீட்சை 26 - 9 - 93 இல் கொழும்பில் நடைபெறும் என்று கல்விச் சேவைகள் சபை உறுப்பினர் க ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்.

விண்ணப்ப முடிவு திகதி இம்மாதம் 27-ம் திகதியாகும். மாதிரி விண்ணப்பப்படிவத்தை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க நல்லூர் பணிமனையில் பெற்றுக் கொள்ளலாம் என்று சங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

### சர்வதேச செஞ்சிலுவை பிரதிநிதிகள்

## பலாலி கைதிகளை 26-ம் திகதி பார்வையிடுவர்

[யாழ்ப்பாணம்]

பலாலி சிறிலங்காஇராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகளை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் நேரில் சென்று பார்வையிடவுள்ளனர்.

இவர்கள் எதிர்வரும்26 ஆம், 27ஆம் திகதிகளில் பலாலி சிறிலங்கா இராணுவ முகாமிற்கு விஜயம் செய்து அங்கு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கைதிகளை பார்வையிட்டுத் திரும்புவர் என அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. [பா]

## நீங்கள் பெறுமதிமிக்க தங்கபபரிசில்களை வென்றெடுக்க இதோ ஒரு அரிய சந்தர்ப்பம் !!

15 08 93ற்கும் 30 12 93ற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் 15.000 (பதினையாயிரம்) கீழே தரப்பட்ட போத்தல்களை ஒப்படைக்கும் போது அதற்குரிய பணத்தைப் பெறுவதுடன் தங்கப் பரிசில்களையும் மேலதிகமாக பெறுவீர்கள். போட்டிக்கு சேர்த்துக் கொள்ளப்படும்

போத்தலகளின் விபரம்

1. ஜாம் / புரோட்னெக்ஸ்
2. பியர் / ஙநலலி [625 m.l]
3. கோடியல் [கறுப்பு / வெளளை] [750 ml.]
4. மோலடோவா [சிறியது] மூடியுடன்
5. போவைிடா [சிறிது] மூடியுடன
6. ஹார்லிக்ஸ் / விவா [சிறியது] மூடியுடன்
7. சோடா [325 m.l]

இப்போட்டி தொடர்பான மேலதிக விபரங்களுக்கு இன்றே எம்மிடம் தொடர்புகொள்ளவும்.

**ரேஸ்ட்லைன் இன்டஸ்ரீஸ்**
[தனி] லிமிட்டட்
14, சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

முக்கிய குறிப்பு:- 15,000 போத்தல்களை சேகரிக்கும் ஒவ்வொருவருக்கும் பரிசில்கள் உண்டு.
(சி/7210)

### மாகாண முதலமைச்சர் நியமனம்

## மேன்முறையீட்டு நீதிமன்றம் விசாரணை நடத்தும்

(கொழும்பு)

தென்மாகாண, வடமேல் மாகாண முதலமைச்சர்கள் நியமனத்தை எதிர்த்து தாக்கல் செய்த வழக்கை உயர் நீதிமன்றம் விசாரணைக்காக மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளது. உயர் நீதிமன்ற நீதியரசர்கள் இத்தீர்ப்பை ஏகமனதாக அறிவித்தனர்.

வழக்கிலுள்ள சட்ட மற்றும் அரசியல் யாப்பு விடயங்கள் குறித்து மேலும் விளக்கங்களை பெற மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் முன்னர் உயர் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

மாகாண ஆளுநருக்குள்ள அதிகாரங்களை அமுல் செய்வது அவருடைய மதிப்பீட்டிற்கும் அனுமானத்திற்கும் உரிய விஷயமல்ல. அது மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் நீதி அடிப்படையில் பரிசீலனை செய்யப்படக்கூடிய விடயம் என பிரதம நீதியரசர் குறிப்பிட்டார்.

## கோட்டை ரயில் நிலையத்தில் பயணப்பைகள் திருட்டு

(கொழும்பு)

வவுனியா நோக்கிப் புறப்படவிருந்த ரயிலில் ஏறிய யுவதிகள் இருவரின் பயணப்பைகள் கோட்டை ரயில் நிலையத்தில் முடிச்சு மாறிகளால் அபகரிக்கப்பட்டுள்ளன.

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்திற்கு அன்பளிப்பு செய்யப்பட்ட நகைகள் உட்பட பெறுமதியான ஆடைகளும் இந்தப் பயணப் பைகளில் இருந்துள்ளன.

வவுனியா செல்லும் ரயிலில் பயணிகள் ஏறியதும் ரயிலில் மின் விளக்குகள் அணைந்திருந்த சமயம் பார்த்து இப்பயணப்பைகள் களவாடப்பட்டுள்ளன.

இச் சம்பவம் தொடர்பாக சம்பந்தப்பட்ட யுவதிகள் கோட்டை புகையிரத நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

## யானைகளின் தொல்லை பெருமளவில் அதிகரிப்பாம்

(கொழும்பு)

வில்பத்து வனவிலங்கு சரணாலயப் பகுதியில் இருந்து வெளியேறும் யானைகள் அரு... கள் வருவது புதினமல்ல. எனினும், பெருமளவில் அடிக்கடி யானைகள் வருவதும், கொல்லும் நோக்கத்துடன் மக்க...

## ஓராண்டு நினைவலைகள்



29-08-92 அன்று மானிப்பாய் சந்தைப்பகுதியில் கொடூரமான முறையில் கொலையுண்ட

**பாக்கியதுரை-உதயகுமார்**
(உதயன்)

பிறப்பு: 30-06-1970
அழிப்பு: 29- 8-1992

திதி: 18-08-1993

பாசமிக்க அன்னை இருக்க
பண்புமிக்க தம்பிமாரோடு தங்கையும் இருக்க
நேசத்துடன் அண்ணனும் அண்ணியும் உடன் இருக்க
நெகிழ்வான அன்புடன் சிற்றன்னையர் இருக்க
எப்படியடா சென்றாய் தனியே?
நீ நின்ற இடம் நெஞ்சில் நிழலாடுதே!
சொந்த பந்தங்களைத் துறந்து சொர்க்கம் சென்றவனே
உன் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

156, பொன்னாலை வீதி,
கட்டுடை,
மானிப்பாய்.

- குடும்பத்தினர்

(சி-7212)

## கண்ணொளி

கண்ணொளி துலங்கிட கரிசலாங்கண்ணி (கையாந்தகரை) தினமும் சாப்பிடுவோம். மில்க்வைற் நீலசோப் மேலுறை/சலவைத்தூள் கட்பத்து(10) சேர்ப்பித்து ஒரு பதிகனறு பெறுங்கள். "மில்க்வைற்"

(சி/7197)

## பெற்றுக்கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க்கோவில் பின் வீதியில் கண்டெடுக்கப்பட்ட சிவஞானேஸ்வரி அம்மாள் கனகேஸ்வரன்,(315 மகேசன் வீதி நவாலி) என்பவரது அடையாளஅட்டை எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் வந்து பெற்றுக்கொள்ளவும்.

## பல்கலைகழகத்துக்கு ஆட்டோக்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழகத்திற்கான மூன்று ஆட்டோக்களும் மற்றும் நான்கு ஸ்கூட்டர்களும் "குமண" கப்பல் மூலம் நேற்று பருத்தித்துறைக்கு எடுத்துவரப்பட்டுள்ளன.

மேலும் ஆர். டி. எஸ் எச். எஸ் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஆகியவற்றிற்குமருந்து வகைகளும் எடுத்துவரப் பட்டுள்ளன

இதைவிட புனர்வாழ்வு புனரமைப்புத் திணைக்களத்திற்கான 2 479 மெற்றிக்தொன் அத்தியாவசியப் பொருள்களும் எடுத்துவரப்படுகின்றன.

பொருள்கள் இறக்கும் பணிகள் நேற்று உடன் ஆரம்பமாகின என சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

(யோ), (பா)


COMPUTER

கல்வி

GCE A/L பரீட்சை முடிந்த பின் உங்களது நேரத்தை,வாழ்வை வளம் பெறச் செய்யும் தொழிற்கல்வி ஒன்றினைக் கற்பதற்காகச் செலவிட்டுப் பயன் பெறுங்கள்.

BASIC. LOTUS, SHORTHAND & TYPING

ஆகிய COURSES

18 08 93

ஆரம்பமாகின்றன.

For details

SCHOOL OF BUSINESS ADMINISTRATION

16 3rdCross Street Jaffna

(சி-7205)



2. பியர் / நெலலி [625 m.l]

3. கோடியல் [கறுப்பு / வெள்ளை] [750 ml.]

4. மோலடோவா [சிறியது] மூடியுடன்

5. போலவிடா [சிறிது] மூடியுடன

6. ஹார்லிக்ஸ் / விவா [சிறியது] மூடியுடன்

7. சோஸ [325 m.l]

இப்போட்டி தொடர்பான மேலதிக விபரங்களுக்கு இன்றே எம்மிடம் தொடர்புகொள்ளவும்.

ரேஸ்ட்லைன் இன்டஸ்ரீஸ்

[தனி] லிமிட்டட்

14, சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

முக்கிய குறிப்பு:- 15,000 போத்தல்களை சேகரிக்கும் ஒவ்வொருவருக்கும் பரிசில்கள் உண்டு.

(சி/7210)


## 31-ம் நாள் நினைவஞ்சலி



ஜெயபாலசிங்கம் சத்தியகாந்தி

(ஆனந்தி)

எங்கள் அனைவரையும் நினையாப் பிரகாரமாய்
விட்டுப் பிரிந்த எங்கள் அன்புச் செல்வமே!
முல்லைச் சிரிப்பால் எங்கள் அனைவரையும் மகிழ்வித்த தெய்வமே
எங்களுக்காக உன்னை மறந்தது ஏன்?
சாவுகளுள் சங்கமித்துப் போனாலும்
சாகாமல் எங்களுக்குள் எப்பொழுதும் இருக்கிறாய்
ஆனந்த மழையில சிறகடிக்கும் உன் வாலிபப் பருவம் வாட்டு தம்மா
அற்ப நிமிடத்தில் அனைவரையும் மறந்து விட்டாயே
உன் இனிய நினைவுகளை எங்கள் உள்ளம் மறக்குமா?
உன் ஆத்மா சாந்தியடைய இறைவனிடம்
கண்ணீர் என்ற பூக்கள் கொண்டு பிரார்த்திக்கின்றோம்.

இவரைப் பிரிந்து துயருறும்
அப்பா, அம்மா, அண்ணன்மார்,
தங்கை, தம்பி, அக்கா, அத்தான்,
மருமக்கள், உறவினர்கள்.

புதுக்காட்டுச் சந்தி,
பளை.

(5706)

(கொழும்பு)

வவுனியா நோக்கிப் புறப்பட்டவிருந்த ரயிலில் ஏறிய யுவதிகள் இருவரின் பயணப் பைகள் கோட்டை ரயில் நிலையத்தில் முடிச்சு மாறிகளால் அபகரிக்கப்பட்டுள்ளன.

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்திற்கு அன்பளிப்பு செய்யப்பட்ட நகைகள் உட்பட பெறுமதியான ஆடைகளும் இந்தப் பயணப் பைகளில் இருந்துள்ளன.

வவுனியா செல்லும் ரயிலில் பயணிகள் ஏறியதும் ரயிலில் மின் விளக்குகள் அணைந்திருந்த சமயம் பார்த்து இப் பயணப்பைகள் களவாடப்பட்டுள்ளன.

இச் சம்பவம் தொடர்பாக சம்பந்தப்பட்ட யுவதிகள் கோட்டை புகையிரத நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

## யானைகளின் தொல்லை பெருமளவில் அதிகரிப்பாம்

(கொழும்பு)

வில்பத்து வனவிலங்கு சரணாலயப் பகுதியில் இருந்து வெளியேறும் யானைகள் அருகிலுள்ள கிராமங்களில் புகுந்து பெரும் சேதங்களை விளைவித்து அட்டகாசம்புரிவதாகக் கூறப்படுகின்றது

நெலிவேவ ஊரினுள் புகுந்த யானைகள் வீடுகளை உடைத்து நாசமாக்கியதுடன், தானியங்களைஉண்டு சேதம் விளைவிப்பதாகவும் கிராமவாசிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தகிராமங்களுக்குயானைகள் வருவது புதினமல்ல. எனினும், பெருமளவில் அடிக்கடி யானைகள் வருவதும், கொல்லும் நோக்கத்துடன் மக்களைக் கலைப்பதும் மக்களைப் பீதிகொள்ளச் செய்துள்ளது.

இந்த யானைத் தொல்லை பற்றி மாகாணசபை உறுப்பினர் ஆர் எம் குணதிலக மற்றும் காணி அமைச்சர் அசோக வடிகமங்காவ மற்றும் வனவிலங்கு பாதுகாப்புப் பகுதி ஆகியவற்றிடமும் முறையிடப் பட்டுள்ளதாம்.

## குமணவில் உணவு பொருள்; தபால் பொதிகள் இல்லை

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை இறங்குதுறைக்கு "மெரினால்", "குமண" கப்பல்களில் சுமார் 3700 மெற்றிக்தொன் அத்தியாவசிய உணவு மற்றும் பொருள்கள் எடுத்துவரப்பட்டுள்ளன.

இக்கப்பல்கள் நேற்று முன் தினம் பருத்தித்துறை இறங்கு துறையை வந்தடைந்தன.

'மெரினால்' கப்பலில் 900 மெற்றிக்தொன் அரிசியும், 'குமண' கப்பலில் 1,500 மெற்றிக்தொன் அரிசி, 800 மெற்றிக்தொன் சீனி, 50 மெற்றிக்தொன் பட்டாணி பருப்பு 50 மெற்றிக் தொன் மைசூர்பருப்பு, கடலை 25 மெற்றிக்தொன், பயறு 50 மெற்றிக்தொன், மற்றும 23 பரல் டீசல் என்பன எடுத்து வரப்பட்டுள்ளன.

மேலும் இக் கப்பலில் யாழ். பிரதான தபாலகத்திற்கான தபால் பொதிகள் எதுவும் எடுத்துவரப்படவில்லை என சர்வதேச செஞ்சிலுவைச்சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

(பா) (யோ) (30)

## காடுகளை அழித்து குடியேற்றம் செய்யவும்

–தேரோ கோரிக்கை

(கொழும்பு)

யக்புரவிலிருந்து திருக்கோணமடு வரையுமான காட்டுப் பிரதேசம் அழிக்கப்பட்டு மகாவலி அபிவிருத்திச் சபையின் கீழ் கொண்டுவந்து சிங்களவர்களை குடியேற்றம் செய்ய வேண்டும் என்று சீதலகம சிலாலங்கார தம்புலாகல தேரோ கூறியுள்ளார்.

கிழக்கு தமன்கடுவ, தம்புலாகல ஆகிய இரு பிரதேசங்களின் சங்க நாயக்கரான இவர் மேலும் கூறுகையில், இந்தக் காட்டுப் பிரதேசம் புலிகளின் ஆட்சிபீடமாக இருப்பதாகவும், இங்கிருந்து சேருவில, மன்னம்பிட்டி, கறுப்பளை, சாவனபிட்டி முதுகல, அமிஞ்ச பொத்தானை, ஆண்டகாடு, நுவரகல, திம்புலாகல வரையில் தமது நடவடிக்கைகளை விஸ்தரிக்க இதனைப் பயன் படுத்துவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இப் பிரதேசத்தை மகாவலியின் கீழ் கொண்டுவருவதன் மூலம் காட்டு மிருகங்களை வஸ்முலவ, சோமாவதிப் பிரதேசங்களுக்குள் கலைத்துவிட முடியும் எனவும், புலிகளின் தளத்தை இல்லாமற் செய்ய முடியுமெனவும் மேலும் தெரிவித்தார்.

(உதயன்)

பிறப்பு:
30-06-1970

அழிப்பு:
29- 8-1992

திதி: 18-08-1993

பாசமிக்க அன்னை இருக்க
பண்புமிக்க தம்பிமாரோடு தங்கையும் இருக்க
நேசத்துடன் அண்ணனும் அண்ணியும் உடன் இருக்க
நெகிழ்வான அன்புடன் சிற்றன்னையர் இருக்க
எப்படியடா சென்றாய் தனியே?
நீ நின்ற இடம் நெஞ்சில் நிழலாடுதே!
சொந்த பந்தங்களைத் துறந்து சொர்க்கம் சென்றவனே
உன் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

156, பொன்னாலை வீதி,
கட்டுடை,
மானிப்பாய்.

- குடும்பத்தினர்

(சி-7212)

## நினைவு கூருகின்றோம்... 1993-08-18

1988ஆம் ஆண்டு இதே தினத்தில் திருமலை-தம்பலகமம் 98ஆம் கிராமம் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**லெப் அருள்** (சபாரட்ணம் சந்திரராஜா-13ம் கட்டை, தம்பலகமம்-திருமலை)

புதுக்குடியிருப்பில் இந்தியப்படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**கணேஸ்/சிறில்** (— — —)

யாழ்-நல்லூர்ப் பகுதியில் இந்திய மத்திய ரிசேவ் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல்பீட இறுதி ஆண்டு மாணவர்.

யாழ்-புனித சம்பத்திரிசியார் கல்லூரி ஆசிரியர் உட்பட 03 தமிழர்கள்.

1989ஆம் ஆண்டு மதுரங்குளத்தில் இந்தியப்படையினர் மற்றும் தேசவிரோத சக்திகளினால் சுடப்பட்டு வீரச்சாவெய்திய,

**கப்டன் தரன்** (வேல்முருகு தவராசா-புலிபாய்ந்தகல், கிரான்-மட்டு)

கிளிநொச்சி ஐயன்குளம் பகுதியில் விறகுவெட்டச் சென்றபோது இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட இளைஞன் உட்பட 02 தமிழர்கள்.

சாவகச்சேரி-நுணாவில் பகுதியில் வலிப்பு நோய் காரணமாக இரவில் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்படுகையில் இந்தியப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ்ச்சிறுவன்.

1990ஆம் ஆண்டு மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**மூப்பனார்** (முத்துலிங்கம் பிரியதர்ஷன்-கந்தையாவீதி-சாவகச்சேரி)

1991ஆம் ஆண்டு மட்டு-மன்சேராப் பகுதியில சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**சுகியன்** (சுப்பிரமணியம் செல்வகுமார் ஊறணி - மட்டு)

யாழ் - இளவாலைப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையின் போது சுட்டுக்கொல்லப்பட்டு கிணற்றிலிருந்து அடையாளம் காணமுடியாத நிலையில் மீட்கப்பட்ட 05 தமிழர்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/7209)

### சிந்தனைக்கு

பெருந்தன்மையான மனிதன், தான் வழங்கும் உதவிகளைத் தன் கால்மாட்டிலும் தான் பெறும் உதவிகளை தன் இதயத்துக்கு அருகிலும் வைத்துக் கொள்வான்.

- ஸர் ஃபுல்க் கிரெவில்


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 18-08-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2028
த. பெ. எண்-05


## போராடுவதைத் தவிர வேறு வழி இல்லை

இலங்கையில் இடம் பெற்றுவரும் ஆயுத மோதல்கள் குறித்து சர்வதேசத்தின் கவனம் திரும்பியுள்ள அதேவேளை, இப்பிரச்சினையைக் தீர்த்து வைக்க ஐக்கியநாடுகள் சபை தலையிட வேண்டும் என்ற கோரிக்கையும் பலரிடம் இருந்து விடுக்கப்பட்டு வருகின்றது.

கடந்த யூன் மாதம் ஐ. நா. சபையின் தீர்மானத்திற்கிணங்க, ஆஸ்திரிய நாட்டின் தலைநகரான வியன்னாவில் யூன் மாதம் இடம்பெற்ற உலக மனித உரிமைகள் மாநாட்டில், இலங்கையில் இடம்பெற்றுவரும் தமிழரின் விடுதலைப் போராட்டம் பிரதிபலித்தது. இம் மாநாட்டில், உலக சமாதான அமைப்பு என்ற சர்வதேச மனித உரிமைகள் அமைப்பு ஒழுங்கு செய்த அறிக்கை 120 மனித உரிமை அமைப்புக்களினால் கூட்டாக கைச்சாத்திடப்பட்டு உலக மனித உரிமைகள் மாநாட்டுத் தலைவரிடம் கையளிக்கப்பட்டது. இவ் அறிக்கையானது, வடக்கு - கிழக்குப் பிரச்சினையை சிறிலங்கா அரசாங்கம் இராணுவரீதியாக தீர்க்க முற்படுவதைக் கண்டித்ததோடு, இலங்கைத் தீவானது இரு நாடுகளாகப் பிரிவதற்கான நிலை நெருங்கி வந்துள்ளதையும், சுட்டிக்காட்டியுள்ளது.

அடுத்ததாக, கனடாவில் தலைமையகத்தைக் கொண்டுள்ள உலகளாவிய ஒத்துழைப்பிற்கான உலக கவுன்சிலின், நான்கு நோபல் பரிசு பெற்ற உறுப்பினர்கள், இனப்பிரச்சினை ஐ. நா. சபை மத்தியஸ்தத்தின் கீழ் சமஷ்டி அமைப்பு முறை ஒன்றின்கீழ் தீர்க்கப்பட வேண்டும் என கோரிக்கை விடுத்திருந்தனர்.

இறுதியாக, உலகத் தமிழர் இயக்கமானது ஐ. நா. சபை இனப்பிரச்சினை விவகாரத்தில் தலையீடு செய்து, தமிழரை இன அழிவில் இருந்து காப்பாற்றுவதோடு, இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வு காணப்பட வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளது.

# அனுராவுக்கு எதிரான குற்றப்பத்திரம் வாபஸ்?

சிறிலங்கா சுதந்திரக்கட்சியிலிருந்து ஒழுக்காற்று நடவடிக்கை காரணமாக வெளியேற்றப்பட்ட அநுரா பண்டாரநாயக்காவை மீண்டும் கட்சியில் சேர்த்துக்கொள்வது குறித்து தற்போது அந்தரங்கமாக ஆலோசிக்கப்பட்டு வருவதாக கட்சியின் அதிகாரபூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன. இப்பிரச்சினை விரைவில் சாதகமாக தீர்த்து வைக்கப்படும் எனவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த புதிய முயற்சி சுதந்திரக்கட்சியில் புதிய சகாப்தத்தை தோற்றுவிக்கும் எனவும் இவ்விடயம் குறித்து உயர் கட்சி உறுப்பினர்கள் தற்போது ஆராய்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. சிறிமாவோ பண்டாரநாயக்காவிற்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய அனுரா விரும்பவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதே சமயம் அநுரா பண்டாரநாயக்கா கடந்த வெள்ளியன்று பிரிட்டன் புறப்பட்டுச் சென்றதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## பேருவளை கடற்பரப்பில் மீனவர் கோஷ்டிகள் மோதல்

### இருவரைக் காணவில்லை

(கொழும்பு)

பேருவளைக் கடலில் இரு கோஷ்டிகளுக்கு இடையில் நடந்த மோதலில் ஆறு பேர் காயமடைந்துள்ளனர். மூன்று மீன்பிடிப் படகுகளும் பலத்தசேதம் அடைந்துள்ளன.

இந்த மோதல்களின் போது பெற்றோல் குண்டுகள், கத்திகள் மற்றும் பொல்லுகள் என்பனவும் பாவிக்கப்பட்டதாகவும், இந்த மோதல்கள் பேருவளைக் கடற்கரையிலிருந்து சுமார் ஐந்து மைல் தொலைவில் நடந்தது என்றும் கூறப்படுகின்றது பொலிசார் ஸ்தலத்திற்கு விரைந்து நிலைமையை கட்டுப்படுத்திய போதும் இருவர் இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லையாம்.

## 9 மாதங்களாகியும் அனுமதிப்பத்திரம் இல்லை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு அரசாங்க செயலகத்தில் புதுப்பிப்பதற்காக ஒப்படைக்கப்பட்ட வாகன சாரதி அனுமதிப் பத்திரங்களை ஒன்பது மாதங்களாகியும் இன்னமும் மீளவழங்கப்படவில்லை.

முன்னைய அனுமதிப் பத்திரங்களுக்குபதிலாகதற்போது கம்ப்யூட்டர்கள் மூலமாகவே அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டு வருவது தெரிந்ததே.

மேற்படி பத்திரத்தைப் பெறுவதற்காக அரசாங்கஅலுவலகத்தில் ஒப்படைத்த சாரதிகளுக்கு வழங்கப்பட்ட தற்காலிக பத்திரம் மூன்று மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகக் கூடியது என்றும், இதனால் அநேகமான வாகன சாரதிகள் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

## ரயிலில் இளைஞர் கைது

வவுனியாவிலிருந்து புகையிரதம் மூலம் கொழும்பு சென்ற பதினாறு பேர் கடந்த ஆறாம் திகதி ராகமவில் வைத்து விசேட பொலிஸ் குழுவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளையும் சேர்ந்த இவர்களில் இருவர் பாதுகாப்பு நிலைகளை தாக்கியமை, பதுங்குகுழிகள் அமைத்தமை, இராணுவ தளபாடங்களை ஏற்றிச் சென்றமை போன்ற பல்வேறு செயல்களுடன் தொடர்புடையவர்களாவர் என்றும் பொலிசார் கூறியுள்ளனர். விசாரணையின் போது வேலைக்காக வெளிநாடு செல்ல வந்ததாக இவர்கள் கூறியிருப்பது ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை என்றும் பொலிசார் மேலும் கூறியுள்ளனர்.

## பெற்றுக்கொள்ளவும்

வீதியில கண்டெடுக்கப்பட்ட இரத்தினசிங்கம் மகேஸ்வரன் (நாவலர் ஒழுங்கை, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்) என்பவரின் அடையாள அட்டை எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது உரியவர் வந்து பெற்றுக்கொள்ளவும்.

பாராளுமன்ற

## குண்டுவெடிப்பு சூத்திரதாரி அஜித்குமாரவிற்கு விடுதலை

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் நிகழ்த்தப்பட்ட குண்டு வெடிப்பு சம்பவத்தின் முக்கிய சந்தேக நபர் எனக் கருதப்பட்ட அஜித்குமார கடந்த 6-ம்திகதி விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

மகஸின் சிறைச்சாலையிருந்து விடுவிக்கப்பட்ட இவர் தனது வாழ்க்கைக்குப் பயமுறுத்தல்கள் இருப்பதால் அரசு பாதுகாப்புதொடர்பாகமுழுப் பொறுப்பேற்கும்எனவும் தெரிவித்துள்ளார்.

இலங்கை - இந்திய ஒப்பந்தம் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட 1987 ஆவணி 18-ம் திகதி சிறிலங்காப் பாராளுமன்றத்தில் குண்டுகள் வெடிக்க வைக்கப்பட்டதும்அக்குண்டு வெடிப்புகளில் கீர்த்தி அபயவிக்கிரம, நோபர்ட் சேனாதீர ஆகியோர் கொலையுண்டதும், அப்போது பாதுகாப்பு அமைச்சராக இருந்த லலித் அத்துலத் முதலி படுகாயமடைந்ததும் தெரிந்ததே.

அஜித்குமாரவுடன் ஐவருக்கும் எதிராக வழக்குத்தாக்கல் செய்யப்பட்டதாயினும் 1990 அக்டோபர் 12-ல் நீதிமன்றம் விடுதலை செய்திருந்தது. எனினும் பாதுகாப்பு அமைச்சின் உத்தரவின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த இவரை 1993 மே 1ம் திகதி விசாரணை செய்த ஜயலத் குழு புனருத்தாரண முகாமிற்கு அனுப்ப சிபார்சு செய்தது. எனினும் சமூகத்திற்கு எதிரான தீங்கு எதையும் தான் இழைக்கவில்லையென்று கூறி புனருத்தாரண முகாமிற்கு செல்ல மறுத்த பின்னர் கடந்த 6-ம் திகதியன்று விடுதலை பெற்று உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டார்.

## பலவத்த தடுப்பு முகாமில் உண்ணாவிரதம் தொடர்கிறது

பலவத்த முகாமிலிருக்கும் 59 கைதிகள் தொடர்ந்தும் உண்ணாவிரதம் அனுஷ்டிக்கின்றனர். இவர்கள் கடந்த 11ஆம திகதி இவ் உண்ணாவிரதத்தை ஆரம்பித்திருந்தனர். அவர்கள் தம்மை விரைவில் விடுவிக்குமாறு கோரியே உண்ணாவிரதம் அனுஷ்டிக்கின்றனர் இவர்களில் ஐவர் 100 அடி நீர்த்தாங்கியின் மேல் உண்ணாவிரதம் இருப்பதனால் இவர்களைப் பார்வையிட வைத்தியர்களுக்கு எவ்வித வசதியுமில்லை எனத் தெரிய வருகிறது.

பலவத்த முகாமிலிருக்கும் சகலருக்கும் எதிராக நீதிபதியினால் உயர்மன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருப்பதாக ஜயலத் குழுவினர் கூறினர். வன்முறை, தீவைப்பு, அரசபொருள்கள் கொள்ளையடித்தல், ஆயுதம் சேகரித்தல் போன்ற உயரிய குற்றச் சாட்டின் பேரின் 53பேர் அங்கிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. அவர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டிருப்பதால் அவர்களை விடுவிக்க முடியாதென ஜயலத் குழுவினர் கூறுகின்றனர்.

அங்கிருந்த பலர் ஜயலத் குழுவின் விசாரணையின் பெயரில் விடுதலை செய்யப்பட்டும் சிலர் புனர்வாழ்வு முகாமிற்கு அனுப்பப்பட்டும் உள்ளனர் என ஜயலத் குழுவினர் கூறுகின்றனர்.

# காங்கிரசின் குற்றச்சாட்டு உள்நோக்கம் கொண்டது

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா பிரிவினைவாதத்தை ஊக்குவிப்பதாகக் கூறப்படுவது முற்றிலும் தவறானதுஎன்று மாநில நிதிஅமைச்சர் இரா. நெடுஞ்செழியனும், சட்ட அமைச்சர் கே ஏ. கிருஷ்ணசாமியும் கருத்து வெளியிட்டுள்ளனர்.

சுதந்திர தினத்தை முன்னிட்டு முதல்வர் ஜெயலலிதா ஆற்றிய உரையைப்பற்றி மத்திய அரசு ஆராய்ந்து வருவதாகவும் தேவைப்பட்டால் அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் மத்திய உள்துறை அமைச்சர் எஸ். பி சவான் கூறியிருப்பது அரசியல் உள்நோக்கம் கொண்டது என்று கூட்டாகக் குற்றஞ்சாட்டியுள்ள மாநில அமைச்சர்கள் சென்னையில் வெளியிட்ட அறிக்கையில் மேலும்

முதல்வர் ஜெயலலிதாவோ அ. இ. அ. தி. மு. கவோ பிரிவினை வாதத்தை எப்போதும் ஏற்றுக்கொண்டதில்லை எனவும், தமிழக மக்களுக்கு கிடைக்கவேண்டிய நியாயமான உரிமைகளை மத்திய அரசு வழங்கவில்லை என்பதை சுட்டிக்காட்டியே அவர் உரைநிகழ்த்தியதாகவும் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் தனித் தமிழ்

## இந்திய மீனவர் விடுதலைக்கு நடவடிக்கை எடுக்கவும்

### - விசைப்படகு மீனவர் கோரிக்கை

கடந்த பல மாதங்களாக சிறிலங்கா சிறைகளில் வாடும் தமிழக மீனவர்களை விடுவிக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று இராமேஸ்வரம் பகுதி மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இராமேஸ்வரம் பகுதி விசைப்படகு மீனவர் சங்கம் இது தொடர்பாக விடுத்த அறிக்கையொன்றில் கடந்த டிசம்பர் மாதத்தில் கச்சதீவுக்கு சமீபமாக கடலில் வைத்து இலங்கைக் கடற்படையினரால் இம் மீனவர்கள் கைது செய்யப்பட்டதாகவும், இவர்களை விடுவிக்க இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவரும், மீன்வளத்துறை இயக்குநரும் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

பாரதீய ஜனதாவுடன்

## தேர்தல் உடன்பாடு

னையை சிறிலங்கா அரசாங்கம் இராணுவரீதியாக தீர்க்க முற்படுவதைக் கண்டித்ததோடு, இலங்கைத் தீவானது இரு நாடுகளாகப் பிரிவதற்கான நிலை நெருங்கி வந்துள்ளதையும், சுட்டிக்காட்டியுள்ளது.

அடுத்ததாக, கனடாவில் தலைமையகத்தைக் கொண்டுள்ள உலகளாவிய ஒத்துழைப்பிற்கான உலக கவுன்சிலின், நான்கு நோபல் பரிசு பெற்ற உறுப்பினர்கள், இனப்பிரச்சினை ஐ.நா. சபை மத்தியஸ்தத்தின் கீழ் சமஷ்டி அமைபபு முறை ஒன்றின்கீழ் தீர்க்கப்பட வேண்டும் என கோரிக்கை விடுத்திருந்தனர்.

இறுதியாக, உலகத் தமிழர் இயக்கமானது ஐ.நா. சபை இனப்பிரச்சினை விவகாரத்தில் தலையீடு செய்து, தமிழரை இன அழிவில் இருந்து காப்பாற்றுவதோடு, இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வு காணப்பட வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளது.

ஐ. நா. சபையின் மத்தியஸ்தம், தலையீடு என்பன ஒருபிரதேசத்தில் நிகழும் பிரச்சினைகளை எந்தளவு தூரம் தீர்த்து வைக்கும் என்பது இன்றைய நிலையில் கேள்விக்குரியதே ஐ. நா வின் சமாதானப் பணிகள் பல இன்று குழப்பத்திற்குள்ளானவையாகவும் சர்ச்சைக்குரியவையாகவும் மாறியுள்ளன. ஆயினும், இனப்பிரச்சினையானது இன்று சர்வதேசத்தின் கவனத்தை ஈர்ப்பதாகவும், பிரச்சினை தீர்த்து வைக்கப்பட வேண்டிய அவசியத்தையும் உணர்த்தும் ஒன்றாகவும் மாறியுள்ளது.

ஆனால், சிறிலங்கா அரசாங்கம் இனப்பிரச்சினை குறித்து தனது நிலைப்பாட்டில் இருந்து எள்ளளவும் மாறியதாகவில்லை. உலகளாவிய ஒத்துழைப்புக்கான உலக கவுன்சில் அனுப்பிய சமாதான திட்டத்தை நிராகரித்து, அதன் செயலாளருக்கு சிறிலங்கா அரசாங்கம் எழுதியுள்ள கடிதத்தில், ''இலங்கையின் வடக்கு - கிழக்கில் நிலவும் வன்செயல் பிரச்சினை முற்றுமுழுதாக ஒரு உள்நாட்டுப் பிரச்சினையாகும். அதுவொரு இனப் பிரச்சினையல்ல; அதுவோர் பயங்கரவாதப் பிரச்சினையாகும். இது துப்பாக்கிக் கலாசாரத்தை மையமாகக் கொண்டது'' எனத் தெரிவித்துள்ளது.

சிறிலங்கா அரசாங்கத்தின் இவ் அறிவிப்பானது இனபபிரச்சினை குறித்து பௌத்தப் பேரின அரசு கொண்டுள்ள தெளிவான நிலையை விளக்குவதாகும். அதாவது, இனப்பிரச்சினையை சிங்கள அரசு ஒரு இன மக்களின் பிரச்சினை என்று கருதாததோடு, அதற்கு சமாதான ரீதியான அரசியல் தீர்வு ஒன்றைக் காணும் நோக்கம் அதற்கு இல்லை என்பதையும் தெளிவுபடக் கூறியுள்ளது.

இவ் அறிவிப்பை இன்று தமிழர்கள் மட்டுமல்ல, உலகிலுள்ள சகலரும உணர்ந்து கொள்ள வேண்டும். இதன் பிரகாரம் தமிழ் மக்கள் தமது பிரச்சினைகளைத் தீர்க்கப் போராடுவதைத் தவிர வேறு மார்க்கம் இல்லை என்பதை விளங்கிக் கொண்டு அதற்குத் தயாராக வேண்டும். இதேவேளை, உலக சமுதாயம் ஓர் இனமக்கள்மீது ஒரு பேரினவாத அரசு மேற்கொண்டு வரும் இன ஒடுக்கலையும், அவர்களது அடிப்படை உரிமைகளையும், சுதந்திர வாழ்வையும் நசுக்கி வருவதை புரிந்து கொண்டு அம் மக்களின் உரிமைகளை அங்கீகரிக்க முன்வர வேண்டும்.

அனுமதிப்பத்திரங்கள் வழங் பதாகவும் கூறப்படுகிறது.

வும்.

குத் தாக்கல் செய்யப்பட்டி

னர் கூறுகின்றனர்.

# காங்கிரசின் குற்றச்சாட்டு உள்நோக்கம் கொண்டது

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா பிரிவினைவாதத்தை ஊக்குவிப்பதாகக் கூறப்படுவது முற்றிலும் தவறானதுஎன்று மாநில நிதிஅமைச்சர் இரா. நெடுஞ்செழியனும், சட்ட அமைச்சர் கே ஏ. கிருஷ்ணசாமியும் கருத்து வெளியிட்டுள்ளனர்.

சுதந்திர தினத்தை முன்னிட்டு முதல்வர் ஜெயலலிதா ஆற்றிய உரையைப்பற்றி மத்திய அரசு ஆராய்ந்து வருவதாகவும் தேவைப்பட்டால் அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படும எனவும் மத்திய உள்துறை அமைச்சர் எஸ். பி சவான் கூறியிருப்பது அரசியல் உள்நோக்கம் கொண்டது என்று கூட்டாகக் குற்றஞ்சாட்டியுள்ள மாநில அமைச்சர்கள் சென்னையில் வெளியிட்ட அறிக்கையில் மேலும் முதல்வர் ஜெயலலிதாவோ அ. இ. அ. தி. மு. கவோ பிரிவினை வாதத்தை எப்போதும் ஏற்றுக்கொண்டதில்லை எனவும், தமிழக மக்களுக்கு கிடைக்கவேண்டிய நியாயமான உரிமைகளை மத்திய அரசு வழங்கவில்லை என்பதை சுட்டிக்காட்டியே அவர் உரைநிகழ்த்தியதாகவும் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் தனித் தமிழ் நாடு பற்றிக் குரல் கொடுக்கும் பாட்டாளி மக்கள் கட்சியுடன் கூட்டணி அமைக்க தமிழக காங்கிரஸ் கட்சியின் வாழப்பாடி இராமமூர்த்திதான் முயற்சி எடுத்தார் என்றும் தேசிய ஒருமைப்பாட்டை நிலைநிறுத்தவே விடுதலைப்புலிகளுக்கு எதிரான நடவடிக்கையில் முதல்வர் ஜெயலலிதா தீவிரமாகி இருப்பதாகவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

## பிரிவினையை ஆதரித்து ஜெயலலிதா பேச்சு

வாழப்பாடி குற்றச்சாட்டு

(சென்னை)

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா தனது இந்திய சுதந்திர தின உரையில் பிரிவினைவாதத்தை ஆதரித்து பேசியதாக தமிழக காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி குற்றஞ்சாட்டியுள்ளார். மத்திய அரசையும் மத்திய அமைச்சர்களையும் தமது உரையில் ஜெயலலிதா கண்டித்திருப்பது தமிழ்நாடு தனித்தீவாக ஆகிவிட்டதோ என்றசந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. இது குறித்து மத்திய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.

எந்த மாநில முதலமைச்சர்களும் செய்திராத வகையில் சுதந்திரதின விழாவை மத்திய அரசை தாக்க ஜெயலலிதா பயன்படுத்தியுள்ளார் மத்திய அமைச்சர் ஒருவர் சென்னை வந்து குண்டுவெடிப்புதொடர்பாக நடவடிக்கை எடுக்கும்படி கூறியபின்னர் தான் செயல்படும் நிலையில் மாநில அரசும், மாநிலபொலிசும் இல்லை என ஜெயலலிதா கூறியிருப்பதை வாழப்பாடி ராமமூர்த்தி கண்டித்துள்ளார் இதுபோன்ற சந்தர்ப்பங்களில் மத்திய அரசு தலையிடுவதை பிற மாநிலங்கள் வரவேற்கும்போது ஜெயலலிதா இவ்வாறு பேசியது கண்டிக்கத்தக்கது என்றும் அவர் குறிப்பிட்டார்.

## அகதிகள் புறப்பட்டனர்

(சென்னை)

சென்னையிலிருந்து இலங்கைத் தமிழ் அகதிகளில் 1139 பேர் நேற்று முன்தினம் எம் வி நிக்கோபார் கப்பல்மூலம்திருக்கோணமலை நோக்கிப் புறப்பட்டனர். சில மாதங்களாக இடை நிறுத்தப்பட்டிருந்த அகதிகளைமீண்டும்அனுப்பும்பணி ஆரம்பிக்கப் பட்ட பின்னர் புறப்பட்ட இரண்டாவது அணி இதுவாகும்.

## இந்திய மீனவர் விடுதலைக்கு நடவடிக்கை எடுக்கவும்

– விசைப்படகு மீனவர் கோரிக்கை

கடந்த பல மாதங்களாக சிறிலங்கா சிறைகளில் வாடும் தமிழக மீனவர்களை விடுவிக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று இராமேஸ்வரம் பகுதி மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இராமேஸ்வரம் பகுதி விசைப்படகு மீனவர் சங்கம் இது தொடர்பாக விடுத்த அறிக்கையொன்றில் கடந்த டிசம்பர் மாதத்தில் கச்சதீவுக்கு சமீபமாக கடலில் வைத்து இலங்கைக் கடற்படையினரால் இம் மீனவர்கள் கைது செய்யப்பட்டதாகவும், இவர்களை விடுவிக்க இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவரும், மீன்வளத்துறை இயக்குநரும் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

## பாரதீய ஜனதாவுடன் தேர்தல் உடன்பாடு பேச்சுக்கே இடமில்லை

– எஸ்.டி எஸ். தெரிவிப்பு

(சென்னை)

பாரதீய ஜனதாக் கட்சியுடன் தேர்தல் உடன்பாடு செய்து கொள்வது என்ற பேச்சுக்கே இடமில்லை என்று அ.இ அ.தி மு கவின் துணைப் பொதுச் செயலாளரான எஸ் டி. சோமசுந்தரம் கூறியுள்ளார். திருச்சியில் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய அவர் மேலும கூறுகையில் சிறுபான்மை மக்களுக்கு பாதுகாப்பளிப்பதில் தமது கட்சி கடமைப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

## சந்தை விலை விபரம் (16-08-1993)

## யாழ். மாவட்ட சராசரி சில்லறை விலைகள்

| தொ. இல. | பொருள்கள் | அலகு | திருநெல்வேலி | பெரியகடை | சுன்னாகம் | அச்சுவேலி | சங்கானை | நெல்லியடி | பருத்தித்துறை | கொடிகாமம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| 01. | குத்தரிசி | கி.கி | — | 31 00 | — | 29.50 | — | 30.00 | 29.00 | 30.50 |
| 02. | கோதுமை மா | ,, | — | 13.50 | — | 14.50 | — | 14.00 | 14.00 | 14.00 |
| 03. | சீனி | ,, | — | 29.00 | — | 30.00 | — | 36.00 | 35.00 | 32 50 |
| 04. | கத்தரி | ,, | 13.50 | 19.00 | 10.50 | 14.00 | 9.00 | 10.50 | 17.00 | 12.50 |
| 05. | வெண்டி | ,, | 11.00 | 23.00 | 9.00 | 25.00 | 6.50 | 21.00 | 15.00 | 15.00 |
| 06. | பாகல் | ,, | — | 22.00 | 11.00 | 26 50 | 26.00 | 20.00 | 20.00 | 11.00 |
| 07. | புடோல் | ,, | — | 14.00 | 7.00 | 11.00 | 10 00 | 11.00 | 16.00 | 15.00 |
| 08. | பயுற்றங்காய் | ,, | 14.00 | 23 00 | 10 00 | 25.00 | 22.00 | 11.00 | 13.00 | 12 50 |
| 09. | தக்காளிபபழம் | ,, | 42.50 | 48.00 | 24.00 | 60.00 | 60 00 | 43.00 | — | — |
| 10. | வாழைக்காய் | ,, | 32 00 | 45.00 | 33.00 | 40.00 | 45.00 | 38.00 | 42.50 | 45.00 |
| 11. | பீற்றூட் | ,, | 16.00 | 23.00 | 13.50 | 35.00 | 24.50 | 21.00 | 25.00 | 12.50 |
| 12. | தேங்காய் | ஒன்று | 13.00 | 17.50 | 14.50 | 13.50 | 13.50 | 13 00 | 15.00 | 11.50 |
| 13. | பச்சைமிளகாய் | கி.கி | 63.00 | 55.00 | 48.00 | 106.50 | 53 00 | 68.00 | 51.50 | 36 50 |
| 14. | எலுமிச்சை | ,, | 95.00 | 130.00 | 126.50 | 110.00 | 140.00 | 103.00 | 120.00 | 120 00 |
| 15. | வெஙகாயம் | ,, | 11.00 | 14.00 | 9.50 | 12.50 | 10 00 | 11.50 | 12.00 | 9 00 |
| 16. | கப்பல் வாழைப்பழம் | ,, | 52.50 | 56.50 | 50.00 | 47.00 | 45 00 | 60.00 | 46 50 | 45 00 |
| 17. | இறால் | ,, | — | — | 65.00 | 100 00 | 46 50 | — | 60 00 | 50.00 |
| 18. | பெரிய மீன் | ,, | — | — | 100.00 | 128.00 | 80 00 | — | 75.00 | 100 00 |
| 19. | சிறிய மீன் | ,, | — | — | 60.00 | 103.00 | 65 00 | — | — | — |
| 20. | முட்டை | ஒன்று | — | — | — | 8.50 | 8.00 | — | 8.00 | 6.50 |

தகவல்:- தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம்

ஈழநாதம்

### வீரவணக்க கூட்டம்

வலிகாமம் கோட்டம் சண்டிலிப்பாய் வட்டத்தைச் சேர்ந்த 7-ம், 8-ம் மாதங்களில் வீரச்சாவடைந்த மாவீரர்களின் நினைவாக வீரவணக்கக் கூட்டம் இன்று இரவு 8-00 மணிக்கு மானிப்பாய் வடக்கு வளர்மதி சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறவுள்ளது. இவ் வீரவணக்கக் கூட்டத்தில் தமிழீழவிடுதலைப்புலிகள் உறுப்பினர்கள் கலந்து கொண்டு உரையாற்றுவர் தமிழீழவிடுதலைப்புலிகள் கலைபண்பாட்டு கழகத்தினரின் கலைநிகழ்ச்சிகளும்இடம்பெறும்.

### சமூகம் தரவும்

தேசிய கல்விநிறுவகம் பட்டப்பின் படிப்பு கல்விடிப்ளோமா பயிற்சி நெறிக்கு தத்தமது பெயர்களைப் பதிவு செய்துகொண்ட சகல ஆசிரியர்களையும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 10.00மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரிக்குச் சமுகமளிக்குமாறு நெறியின் இணைப்பாளர் திரு. சி. புலேந்திரன் கேட்டுக் கொள்ளுகின்றார்.

### வகுப்புகள்

எழுது விளைஞர் தரம் II "அ" பதவி உயர்வுக்கான பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கான வகுப்பு உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்கத்தால் இன்று பிற்பகல் 3.00 மணிக்கு யாழ். மாநகர சபையில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

# ஐ. நா. கட்டுப்பாட்டில் பொஸ்னியா தலைநகர்

(சரஜேவோ)

பொஸ்னியாவில் சண்டையிடும் வெவ்வேறான மூன்று குழுக்களும் சரஜேவோ நகரத்தை ஐ. நா. வின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளன. மீண்டும் துவங்கப்பட்ட ஜெனிவா பேச்சுக்களின் போது இதற்கான இணக்கம் கொள்கையளவில் காணப்பட்டுள்ளது. சரஜேவோவிலிருந்து எல்லா இராணுவங்களும் விலக்கப்பட்டு அந் நகரம் ஐ. நா. வின் வசம் ஒப்படைக்கப்படும் என்று இந்த இணக்கம் கூறுகின்றது. இந்த முடிவின்மூலம் அமைதிப் பேச்சுக்கள் ஊக்குவிக்கப்படும் எனவும், நம்பிக்கை உணர்வுகள் தோற்றுவிக்கப்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

பொஸ்னியாவை மூன்று சுயாட்சி நிர்வாகப் பிரிவுகளாகப் பிரிக்கும் இந்தத் திட்டத்திற்கு புத்துயிர் ஊட்டும் வகையில் ஜெனிவா பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பித்துள்ளன.

# நவாப் ஷெரீப்மீது கொலைக் குற்றச்சாட்டு

(இஸ்லாமாபாத்)

லாகூரில் அரசியல் போட்டியாளர் ஒருவர் கொலையுண்ட சம்பவத்திற்கும் முன்னாள் பிரதமர் நவாப் ஷெரீப் மற்றும் உளவுப் பிரிவுத் தலைவர் பிரிகேடியர் இமிராட்டும் தொடர்புபட்டிருந்ததாக குற்றச்சாட்டுகள் கிளப்பப்பட்டுள்ளன.

பாகிஸ்தான் மக்கள் கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவரான மாலிக் ஜாபர் அலி சனிக்கிழமையன்று சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம்பற்றி பொலீசார் வெளியிட்ட முதல் தகவல் அறிக்கையிலேயே இது குறிப்பிடப்பட்டுள்ளது.

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர்நவாப்ஷெரீப்போட்டியிட்ட அதே தொகுதியிலேயே மாலிக் ஜாபர்அலியும் போட்டியிட்டிருந்தார் என்பதும் இவரது கொலையுடன் தம்மைச் சம்பந்தப்படுத்துவது அர்த்தமற்றது என்றும், இக்கொலையை கண்டிக்கிறேன் என்றும் நவாப்ஷெரீப் அறிக்கை வெளியிட்டிருந்ததும் குறிப்பிடத் தக்கதாகும்.

## கிழக்குத் தீமோரிலிருந்து படைகள் மீளப்பெறப்படும்

### இந்தோனேசியா தெரிவிப்பு

(ஜகார்த்தா)

இந்தோனேசியா கிழக்குத் தீமோரிலிருந்து தனது படைகளை மீளப்பெறுவதாக அறிவித்துள்ளது. அபிவிருத்தித் திட்டங்களில் ஈடுபடும் படையினர் மட்டும் அங்கு தரித்து நிற்பர் என்றும், மேஜர் ஜெனரல் தியோ ஷெரீப் இப்பிராந்தியத்தின் இராணுவத் தளபதியாக இருப்பார் என்றும் இந்தோனேசிய அரசு அறிவித்துள்ளது.

இந்தப் பகுதியில் தற்போதுள்ள துருப்புகள் யாவும் அக்டோபர் மாதத்திற்கு முன்பாக மீளப்பெறப்படும் என்றும் அவ்வறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தோனேசியஆக்கிரமிப்பின் கீழ் இருக்கும் கிழக்குத்தீமோர் மக்கள் தமது விடுதலைக்காக போராடிவருவது குறிப்பிடத் தக்கதாகும்.

## ஜெயின் விசாரணைக் குழு கலைக்க ஆலோசனை

ராஜீவ்காந்தி கொலைவழக்கில் சதித்திட்டம் தீட்டப்பட்டதா என்பது குறித்து விசாரித்துவரும் விசாரணைக் குழுவின் தலைவர் நீதிபதி ஜெயின் தாம் இக்குழுவைக் கலைத் விடப்போவதாக அச்சுறுத்தியுள்ளார். தமது விசாரணைக் குழுவிற்கு மத்திய அரசு உதவிகள் வழங்குவதில்லை என்று குற்றஞ்சாட்டிய நீதிபதி ஜெயின் இதனால் தாம் விசாரணைக்குழுவைக் கலைத்துவிடப் போவதாக எச்சரித்துள்ளார்.

நீதிபதி ஜெயினின் இந்த எச்சரிக்கை குறித்து இந்திய நாடாளுமன்றத்தில் நேற்று எதிரணியினர் கேள்வி எழுப்பினர். ஜெயின் விசாரணைக் குழு தொடர்ந்து செயற்படும். அதற்கான சகல உதவியையும் அரசு வழங்கும் எனவும் இதற்குப் பதிலளித்த மத்திய சட்ட நீதியமைச்சர் பரத்வார் தெரிவித்தார்.

## பலமைல்கள் சென்று பரீட்சை எழுதிய மாணவர்

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கில் ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்ற மாணவர்களுக்கு பரீட்சை நிலையங்கள் ஒதுக்கப்பட்ட விதம் குறித்து பெற்றோர் குறை கூறியுள்ளனர். சமீபத்தில் உள்ள பரீட்சை நிலையங்களில் மாணவர்களுக்கு இட ஒதுக்கீடு செய்யாது தொலை தூர பரீட்சை நிலையங்கள் மாணவர்களுக்கு ஒதுக்கப்பட்டதாகவும் இதனால் மாணவர்கள் பெரும் சிரமத்திற்கு உட்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மணற்காடு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன்பாடசாலை மாணவர்கள் தமது பாடசாலைக்கு அண்மையிலுள்ள இரண்டு பரீட்சை நிலையங்களைக் கடந்து 15 மைல் தூரத்திலுள்ள செம்பியன்பற்று றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் அமைந்திருந்த பரீட்சை நிலையத்திற்குச் செல்லவேண்டி ஏற்பட்டது.

இதேபோல மாமுனை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, உடுத்துறை மகாவித்தியாலயம், ஆழியவளை சி. சி. தமிழ்க் கலவன் பாடசாலை, வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா கனிஷ்ட மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலை மாணவர்களும் அருகிலுள்ள பரீட்சை நிலையங்களைத் தாண்டி பல மைல் தூரம் சென்று பரீட்சை எழுத வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. (36)


## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

**17-08-93**

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 10623

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

26-1735, 41-8823, 28-9633, 26-3146, 40-1188, 28-0523, 24-5241, 27-7711, 26-9495, 26-0423, 41-7693, 24-6448, 24-5167, 24-4153, 27-9756, 24-5703, 27-7717, 27-5217.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

42-1494, 28-3890, 24-8631, 28-7978, 26-0449, 24-6053, 42-3419, 26-6628, 26-4610, 26-1326, 24-6475.


## மீண்டும் சமாதானப் பேச்சு

மத்திய கிழக்குப் பிராந்திய சமாதானத்திற்கான பேச்சுவார்த்தைகள் மீண்டும் இம்மாதம் 31-ம் திகதி முதல் ஆரம்பமாகும் என்று ஜோர்தானிய அதிகாரி ஒருவர் கூறியுள்ளார். மீண்டும் ஆரம்பிக்க இருக்கும் இச்சமாதானப் பேச்சுக்கள் பதினோராவது சுற்றுப் பேச்சுக்களாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

## குவைத்தில் தொழில்பார்த்த இலங்கையருக்கு நட்டஈடு

குவைத் மீதான ஈராக்கின் தாக்குதல் நடவடிக்கையின் போது குவைத்தில் தொழிலிழந்து அகதிகளாகவந்துசேர்ந்த இலங்கையர்களுக்கான நட்டஈட்டு விண்ணப்பப்பத்திரங்கள் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புக் காரியாலயத்தில்உள்ள கோவையில்பதிவு செய்யப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நட்ட ஈட்டு கொடுப்பனவுக்கான பத்திரங்கள் அவர்களுக்குரிய கோவையில் பதிவு செய்யப்பட்டு, குவைத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரண முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அறிய வருகிறது.

இது சம்பந்தமான அறிவிப்புகள், குவைத்திலிருந்துதிரும்பி வந்துள்ள வடபகுதியைச் சேர்ந்தவர்களுக்கும் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புக் காரியாலயத்தினால் சமீபத்தில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (தி)

### விசேட கூட்டம்

காங்கேசன்துறை மாவட்ட சாரணர்கிளைச்சங்கப் பிரிவுக்குட்பட்ட சாரணர்களுக்கான விசேட கூட்டம் ஒன்று இன்று காலை 9.30 மணியளவில் கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலயத்தில் நடைபெறவிருப்பதாகவும், இக் கூட்டத்தில் தவறாது கலந்துகொள்ளுமாறும் சாரண ஆணையாளர் திரு. என். போஜன் சகல சாரணர்களையும் கேட்டுக்கொள்கிறார்

### பரிசளிப்பு

நல்லூர்க்கந்தசுவாமி ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு பாலாஜியின் ஆதரவில் இருபாலை தமிழ் மாமன்றம் நடாத்திய சமய அறிவுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்புவிழா நாளைவியாழக்கிழமை மாலை 5.00 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் இடம்பெறும். (24)

### வாசகர் வட்டம்

திறப்புவிழா

## மரண அறிவித்தல்கள்

### அமரர் செல்லையா நவரத்தினம் (சின்னத்தம்பி)

(பிரபல கட்டட ஒப்பந்தகாரர்)

சித்தன்கேணி கலைநகரைச் சேர்ந்தவரும்

### கெயர் பணிப்பாளர் யாழ். விஜயம்

அரச சார்பற்ற கெயர் நிறு


யாழ் நகர் ஸ்ரீதர் திரையரங்கில்

# 'Wild Geese'

'வைல்ட் கீஸ்'

[தமிழ் விளக்கம்]

சண்டைக் காட்சிகள் நிறைந்த படம்

தினசரி மாலை 4.00 மணி, 6.00 மணி

சனி, ஞாயிறு தினங்களில்

காலை 10.30 மணி,

மாலை 4.00 மணி, 6.00 மணி (சி-7114


## பிறந்த நாள் வாழ்த்து



எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 10623

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

26-1735, 41-8823, 28-9633, 26-3146, 40-1188, 28-0523, 24-5241, 27-7711, 26-9495, 26-0423, 41-7693, 24-6448, 24-5167, 24-4153, 27-9756, 24-5703, 27-7717, 27-5217.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

42-1494, 28-3890, 24-8631, 28-7978, 26-0449, 24-6053, 42-3419, 26-6628, 26-4610, 26-1326, 24-6475.

# மரண அறிவித்தல்கள்

## அமரர் செல்லையா நவரத்தினம் (சின்னத்தம்பி)

(பிரபல கட்டட ஒப்பந்தகாரர்)

சித்தன்கேணி கலைநகரைச் சேர்ந்தவரும் பிரபல கட்டட ஒப்பந்தகாரருமான அமரர் செல்லையா நவரத்தினம் (சின்னத்தம்பி) அவர்கள் (17-8-93) நேற்று காலமானார். அன்னார் உருக்குமணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற புன்னர் செல்லையா தம்பதிகளின் அன்பு மகனும், இளங்கோவன் (பிரான்ஸ்), கருணாகரன் சவூதி அரேபியா), பரமேஸ்வரியம்மா (கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்-போரூட்), காலஞ்சென்ற சந்திரமோகன், விஜயகுமார் (சுவிஸ்) ஆகியோரின் அன்புக்கினிய தந்தையும், வாசுகி, நிமலராணி, தவரஞ்சினி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற குமாரவேலு, காசிப்பிள்ளை (இளைப்பாறிய ஆசிரியர்), மீனாட்சியம்மா, சிந்தாமணி, இராசம்மா ஆகியோரின் சகோதரரும், பிரதீஸ், கோமதி, ஜசிந்திகா, ஜசிந்தன் ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று (18-8-93) பகல் 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் 12 மணிக்கு எடுத்துச் செல்லப்பட்டு வழுக்கையாற்று மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ந. கருணாகரன் (மகன்)

கலைநகர்,
சித்தன்கேணி. [5710]

## செல்வி விக்ரோறியா அந்தோனி

சென் ஜேம்ஸ், இளவாலையைச் சேர்ந்த செல்வி விக்ரோறியா அந்தோனி 17-08-93 நேற்று காலமானார்: இவர் திரு. மத்தேஸ் அந்தோனி, திருமதி அந்தோனி மரியம்மா ஆகியோரின் மகளும், யோசேப் மாகிறெட் பத்திநாதர், மத்தேஸ் அல்போன்ஸ் (கொழும்பு), சேவியர் மேரி மகிடலின், இம்மானுவேல் மேரி கொன்சாக், அன்ரனி ஞானப்பிரகாசம் (தியாக்கோன், யாழ். ஆயர் இல்லம்) ஆகியோரின் சகோதரியும், லூட்ஸ்மேரி, லொறன்ரா அல்போன்ஸ், காலஞ்சென்ற பெ. யோசப், க. பிரான்சிஸ் சேவியர், வே. இம்மானுவேல் ஆகியோரின் மைத்துனியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் இன்று (18-08-93) பிற்பகல் 3-30 மணிக்கு யாழ். ஆசனக் கோவிலுக்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலியின் பின் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
அ. பத்திநாதர்

4, பழைய பூங்கா வீதி,
கொய்யாத்தோட்டம். (5707)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 18-ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

கீழ் இருக்கும் கிழக்குத் தீமோர் மக்கள் தமது விடுதலைக்காக போராடிவருவது குறிப்பிடத்தக்கதாகும்.

## மீண்டும் சமாதானப் பேச்சு

மத்திய கிழக்குப் பிராந்திய சமாதானத்திற்கான பேச்சு வார்த்தைகள் மீண்டும் இம் மாதம் 31-ம் திகதி முதல் ஆரம்பமாகும் என்று ஜோர்தானிய அதிகாரி ஒருவர் கூறியுள்ளார். மீண்டும் ஆரம்பிக்க இருக்கும் இச்சமாதானப் பேச்சுக்கள் பதினோராவது சுற்றுப் பேச்சுக்களாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

## கெயர் பணிப்பாளர் யாழ். விஜயம்

அரசசார்பற்ற கெயர் நிறுவனப் பணிப்பாளர் நேற்று கொழும்பிலிருந்து யாழ். வந்தார்.

பலாலிக்கு விமானம் மூலம் வந்த பணிப்பாளர் திரு. லீமொன் ஹஸ்ரர் 'குமண' கப்பல்மூலம் பருத்தித்துறைக்கு வந்து பின்னர் யாழ்ப்பாணம் கூட்டி வரப்பட்டார்.

இவர் நாளைவியாழக்கிழமை கொழும்பு நோக்கிப் புறப்படுவார். (யோ)

## மைசூர்

களிலும் இது நிரப்பியிருக்கக் கண்டுபிடிக்கப்பட்டதாகச் சொல்லப்பட்டது.

கொழும்பிலுள்ள களஞ்சியத்தில் இக்கழிவுப் பொருள் நிரப்பப்பட்டு வடபகுதிக்கு கப்பலில் ஏற்றி அனுப்பப்பட்டது என்று யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (தி)

ஈட்டு விண்ணப்பப்பத்திரங்கள் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புக் காரியாலயத்தில் உள்ள கோவையில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நட்ட ஈட்டு கொடுப்பனவுக்கான பத்திரங்கள் அவர்

## விசேட கூட்டம்

காங்கேசன்துறை மாவட்ட சாரணர்கிளைச்சங்கப் பிரிவுக்குட்பட்ட சாரணர்களுக்கான விசேட கூட்டம் ஒன்று இன்று காலை 9.30 மணியளவில் கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலயத்தில் நடைபெறவிருப்பதாகவும், இக் கூட்டத்தில் தவறாது கலந்துகொள்ளுமாறும் சாரண ஆணையாளர் திரு. என். போஜன் சகல சாரணர்களையும் கேட்டுக்கொள்கிறார்

## எறிகணை

ணுவத்தினர்மீது விடுதலைப் புலிகள் நேற்று முன் தினம் எறிகணைத் தாக்குதலை மேற்கொண்டனர்.

நேற்று முன்தினம் மாலை 4-30மணியளவில்வசாவிளான் பகுதி பாடசாலையை அண்மித்த பகுதி காவலரணில் இருந்த இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் எறிகணைத் தாக்குதலை மேற்கொண்டனர்.

இதன்போது இராணுவ தரப்பினருக்கு ஏற்பட்ட சேத விபரங்கள் தெரியவரவில்லை.

## நியாய

சட்டரீதியான கைது என்று நிருபிக்க முடியாத பல கைதுச் சம்பவங்கள் பற்றி நீதிமன்றம் முன்னும் பல தடவை எச்சரித்ததாக நீதியரசர்கள் தமது தீர்ப்பில் சுட்டிக்காட்டியிருப்பது குறிப்பிடத்தக்கது.

வருகிறது.

இது சம்பந்தமான அறிவிப்புகள், குவைத்திலிருந்து திரும்பி வந்துள்ள வடபகுதியைச் சேர்ந்தவர்களுக்கும் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புக் காரியாலயத்தினால் சமீபத்தில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (தி)

## பரிசளிப்பு

நல்லூர்க்கந்தசுவாமி ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு பாலாஜியின் ஆதரவில் இருபாலை தமிழ் மாமன்றம் நடாத்திய சமய அறிவுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்புவிழா நாளைவியாழக்கிழமை மாலை 5.00 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் இடம்பெறும். (24)

## வாசகர் வட்டம் திறப்புவிழா

பாஷையூர் புனித அந்தோனியார் மகளிர் முன்னேற்றச் சனசமூக நிலையத்தின் ''வாசகர்வட்டம்'' திறப்புவிழாவும், ''படிப்பகம்'' திறப்பு விழாவும் இன்று மாலை 4.00 மணிக்கு இடம்பெறும். (24)

## கொழும்பு

யோர் நேற்றுக்காலை பலாலி விமான நிலையத்தில் இருந்து கொழும்பிற்கு விமான மூலம் புறப்பட்டு போய்ச் சேர்ந்துள்ளனர் என சர்வதேச செஞ்சிலுவைச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. [பா]

## மீனவர்

கும்வரை இந் நிவாரண உதவியை வழங்குவதற்கு ஆவன செய்யுமாறு அவர்கள் யாழ். அரசாங்க அதிபரைக் கேட்டுள்ளனர்.

தமிழீழத்தின் புதிய அத்தியாயம் !

அழகிய வர்ண படங்களை காலாகாலத்திற்கு நிலைத்து நிற்க சிறந்த முறையில் சட்டமிட்டு அமைத்துக் கொடுக்கும் முன்னணி நிறுவனம்

★ படமாடம் ★

சகலவிதமான ★ பூக்கண்ணாடி
★ சாதாரண கண்ணாடி
★ அலுமினிய இணைப்புக்கள்
★ சாமிப்படங்கள்

ஆகியவற்றை மலிவு விலையில் பெற்றுக்கொள்ளவும், மற்றும் சகலவிதமான படங்களை சட்டமிட்டு பெற்றுக்கொள்ளவும் நாடவேண்டிய

ஒரே ஸ்தாபனம்

படமாடம் அர்ச்சுனா வீதி, யாழ்ப்பாணம்.

(சி-7215)

Wild Geese

'வைல்ட் கீஸ்'

[தமிழ் விளக்கம்]

சண்டைக் காட்சிகள் நிறைந்த படம்

தினசரி மாலை 4.00 மணி, 6.00 மணி
சனி, ஞாயிறு தினங்களில்
காலை 10.30 மணி,
மாலை 4.00 மணி, 6.00 மணி (சி-7114

## பிறந்த நாள் வாழ்த்து



செல்வன்

## செல்வராஜ் விவேகன்-வாஸ்

மன்னார் வங்காலை 5-ம் வட்டாரத்தைச் சேர்ந்த செல்வராஜ் – மாலதி தம்பதிகளின் செல்வப் புதல்வன் செ. விவேகன் [சயந்தன்] வாஸ் தனது முதலாவது பிறந்த தினத்தை 18-08-93 புதன்கிழமை சுண்டிக்குளியிலுள்ள தனது இல்லத்தில் மிகவும் குதூகலமாக கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா, அம்மா, தொட்டப்பா, தொட்டம்மா, ஜான் தொட்டப்பா, மாமாமார் அகிலன், பரசுராமன், பாப்பா, பவி, சுதா, அன்ரன், லக்ஸ்மன், பரஞ்சோதி, டேவிற், ரங்கன், சங்கர், கிறிஸ்ரி, வெல்டன், ராஜா, ஆசிம், ரகீம், தவராசா, கதிர், ஜெராட், கார்த்திக், திவாகர், ஜஸ்மின், பெரியப்பாமார் கேமன், சீனிவாசன், தேவா, சுரேஸ், ஞானி, பாலையா, சித்தப்பாமார் ரமேஸ், நிக்கிலஸ், கொலம்பஸ், மற்றும் அன்ரிமார் அகிலா, வானதி, பியந்தி, வினிதா, மரியா, லீமா, மற்றும் உற்றார், உறவினர் யாவரும் ஆனாள் அன்னை நல்லருளால் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் சிறப்பாக வாழ வேண்டுமென வாழ்த்துகிறார்கள்.

பங்கிராஸ் செல்வராஜ் வாஸ்

43, கொழும்புத்துறை றோட்,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம். (5680)